அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்

நான்காம் பருவம்

முதுநிலை வணிகவியல் (கூட்டுறவு மேலாண்மை)

திரு/செல்வி----------

(சேர்க்கை எண்.....) என்பவர் முதுநிலை வணிகவியல்(கூட்டுறவு மேலாண்மை) பட்டப் படிப்பு படிக்கும் உண்மையான மாணவர் என்று உறுதி கூறுகிறேன். பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக அவர் செய்முறைப் பயிற்சிக்காக கூட்டுறவு சங்கங்களைப் பார்வையிட வேண்டும்.

இந்நோக்கத்திற்காக உங்களின் உயர்வான கூட்டுறவு நிறுவனத்தை நாடி வருகிறார். அவர் படிப்பிற்கு வேண்டிய செய்திகளையும், விவரங்களையும் தாங்கள் அளித்தால் நன்றியுடையவராக இருப்பேன். தங்களின் கூட்டுறவு சங்கத்தை அவர் நேரில் வந்து பார்வையிட்டபின் பார்வையிட்டதற்காக ஒரு சான்று அவருக்கு அளிக்கவும்.

இப்பாட அமைப்பு கூட்டுறவுப் பயிற்சி மற்றும் கூட்டுறவினை பிரபலப்படுத்தும் நோக்கமுடையதால் தங்களின் மேலான ஆதரவு வேண்டப்படுகிறது.

ஒவ்வொரு மாணவரும் எங்களிடமிருந்து ஒரு அடையாள அட்டையை கொண்டு வருவர்.

இயக்குநர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்
நான்காம் பருவம்
முதுநிலை வணிகவியல் (கூட்டுறவு மேலாண்மை)
பட்டப் படிப்பு பயிற்சி பதிவேடு

தயாரித்து தாக்கல் செய்வதற்கான நெறிமுறைகள்

இரண்டாம் ஆண்டு முதுநிலை வணிகவியல் (கூட்டுறவு மேலாண்மை) பட்டப் படிப்பு படித்திடும் மாணவர்கள் ஒரு பயிற்சிப் பதிவேடு தாக்கல் செய்ய வேண்டும். இது கட்டாயமானது. பாடத்திட்டத்தின் ஒரு பகுதியான இதற்கு 100 மதிப்பெண்கள் உண்டு.

எல்லா வகையிலும் முழுமையான இப்பயிற்சிப் பதிவேடு இரண்டாம் ஆண்டு தேர்வு எழுதுவதற்கு முன்னர் ஏப்ரல் 30ஆம் **தேதி** அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்க வேண்டும். இதைப் பதிவுத் தபாலில் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இயக்குநர்
'B' பிரிவு
தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர் 608 002, தமிழ்நாடு

பதிவு அஞ்சல் மேல் உரையில் வலது பக்க மேல் மூலையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட வேண்டும். முதுநிலை வணிகவியல் (கூட்டுறவு மேலாண்மை).

மேற்பார்வையிட வேண்டிய கூட்டுறவு சங்கங்கள்

ஒவ்வொரு மாணவரும் ஏதாவது 5 கூட்டுறவு சங்கங்களை மேற்பார்வையிட்டு பயிற்சிப் பதிவேட்டை சமர்ப்பிக்க வேண்டும். இப்பதிவேடு இரண்டு பகுதிகளைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும். முதல் பகுதி கவனித்து பயின்ற அறிக்கை, இந்த அறிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து சங்கங்களைப் பற்றியதாக இருத்தல் வேண்டும். இரண்டாம் பகுதி பணிசார் ஆய்வு அறிக்கை. இந்த அறிக்கையை ஏற்கனவே தேர்ந்தெடுத்த ஐந்து சங்கங்களில் ஏதேனும் இரண்டு சங்கங்களைப் பற்றி ஆழ்ந்து பயின்று அறிக்கை தயாரித்திடல் வேண்டும். இந்த இரண்டு பகுதிகளையும் ஒன்றாக இணைத்து பைண்டிங் செய்து அனுப்ப வேண்டும். இந்த அறிக்கையின் அட்டைப் பகுதியில் அறிக்கைக்கான தலைப்பு, மாணவரின் பெயர், சேர்க்கை எண், தேர்வு பதிவு எண் போன்றவைகள் குறிப்பிடப்பட வேண்டும்.

கூட்டுறவு சங்கங்களை பார்வையிட்டதற்கு சான்றாக செயலர்/தனி அதிகாரி/பொறுப்பு அதிகாரி போன்றோர்களிடமிருந்து வாங்கிய சான்றிதழை அத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பதிவேடு இரண்டு பகுதிகளையும் உள்ளடக்கிய அறிக்கையாக நல்ல முறையில் பைண்டு செய்திருக்க வேண்டும். அதன் தலைப்பு கூட்டுறவு நிறுவன பயிற்சி ஆய்வு அறிக்கை என்று அச்சிடப்பட்டிருக்க வேண்டும்.

மாணவர்கள் கீழ்க்கண்ட சங்கங்களில் ஏதேனும் ஐந்து சங்கங்களுக்குச் சென்று பார்வையிட வேண்டும்.

1) மாவட்ட கூட்டுறவு மைய வங்கி

2) பிரதம வேளாண்மை கூட்டுறவு வங்கி
3) பிரதம கூட்டுறவு நிலவள வங்கி
4) நகர கூட்டுறவு வங்கி
5) பிரதமர் கூட்டுறவு அங்காடி
6) மாநில நெசவாளர் கூட்டுறவு சங்கம்
7) பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கம்
8) பிரதம கூட்டுறவு விற்பனையகம்
9) கூட்டுறவு மொத்த விற்பனை சங்கம்
10) பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்
11) கூட்டுறவு வீடு கட்டும் சங்கம்
12) கூட்டுறவு வீடு அடமான வங்கி
13) தொழில் கூட்டுறவு சங்கம்
14) மீன் வளர்ப்பு கூட்டுறவு சங்கம்
15) பணியாளர் கூட்டுறவு சங்கம்
16) கூட்டுறவு அச்சிடும் சங்கம்.
17) சிறப்பு சங்கங்களான வேளாண் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள், மலைவாழ் பழங்குடியினர் சங்கங்கள் போன்ற தனித்தன்மை வாய்ந்த சங்கங்கள்

கற்றல் எழுத வேண்டிய முக்கிய செய்திகள்

முதல் பகுதி

கவனித்து பயின்ற அறிக்கை

இம்முதற் பகுதியில் ஒவ்வொரு சங்கம் பற்றிய செய்திக் குறிப்பு கீழ்க் கண்ட தலைப்புகளில் பார்வையிடப்பட்ட ஐந்து சங்கங்களும் எழுதப்பட வேண்டும்.

1) சங்கத்தின் தோற்றம், ஆரம்பம் மற்றும் வரலாறு
2) சங்கத்தின் குறிக்கோள்கள்
3) சங்கத்தின் கட்டமைப்பு
4) நிதிவனம்
5) பணிகள்
6) சங்கத்தின் தனிச் சிறப்பு

இரண்டாம் பகுதி

பணிசார் அறிக்கை

பார்வையிட்ட ஐந்து சங்கங்களில் ஏதேனும் இரண்டு சங்கங்களைப் பற்றி ஆராய்ந்து பயின்று திறனாய்வு அறிக்கை தயாரித்தல் வேண்டும். கீழ்க்கண்ட தலைப்புகளில் இப்பகுயின் அறிக்கை இருத்தல் வேண்டும்.

1) செயல் திறனாய்வு
2) எதிர்கால வளர்ச்சி வாய்ப்பு
3) பிரச்சனைகள்
4) சங்கங்களின் முன்னேற்றத்திற்கான பரிந்துரைகள்

இந்தப் பதிவேடு ஆய்வு அறிக்கை எழுதும் நல்ல காகிதத்தாளில் இரண்டு வரி விட்டு ஒரு பக்கத்தில் மட்டும் தட்டெழுத்தால் அச்சிடப்பட்டிருக்க வேண்டும். வெளி அட்டையில் கீழ்க்கண்டவைகள் அச்சிடப்பட வேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தொலைதூர மற்றும் இணையவழிக் கல்வி மையம்

கூட்டுறவு நிறுவனப் பயிற்சி - ஆய்வு அறிக்கை

பெயர் :

சேர்க்கை எண் : **தேர்வு பதிவு எண் :**

ஆண்டு :

பதிவேட்டின் உள்பக்கம் எழுத வேண்டிய வரிசை ஏற்பாடு

1) வெளி அட்டையில் எழுதியவைகளின் படிவம்
2) மாணவர்களிடமிருந்து ஒரு சான்று
   (நான் பயிற்சி பெற்ற சங்கங்கள் பற்றிய அறிக்கை இதுவென்றும், இது என்னால் தனித்து தயாரிக்கப்பட்டது என்றும் உறுதி கூறுகின்றேன்.)
3) உள்ளடக்கப் பக்கங்கள்
   1) முதல் பகுதி
      அ)
      ஆ)
      இ)
      ஈ)
      உ)
   (ஒவ்வொரு சங்கத்தின் பெயர்)
   2) இரண்டாம் பகுதி
      அ)
      ஆ)
   (முதல் பகுதியில் உள்ள சங்கங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு சங்கங்களின் பெயர்)
4) மாணவர்கள் பார்வையிட்ட சங்கங்களிலிருந்து ஐந்து சான்றிதழ்கள் சங்கங்களின் செயலாளர்கள்/தனி அதிகாரிகள்/பொறுப்பு அதிகாரிகளால் கையொப்பமிட்டு வாங்கி இணைக்க வேண்டும். மேலும் அதில் எந்தெந்த தேதிகளில் அச்சங்கங்களுக்கு சென்று பார்வையிட்டனர் என்றும் குறிப்பிடப்பட்ட வேண்டும்.
5) உள் அடக்கப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளபடி வரிசையாக எழுதப்பட வேண்டும். மேலும் ஒவ்வொரு பக்கத்திற்கும் பக்க எண் வரிசையாக எழுதப்பட வேண்டும். பயிற்சிப் பதிவேட்டின் ஒரு படிவத்தை தொலைதூரக் கல்வி மற்றும் இணையவழிக் கல்வி மையத்திற்கு அனுப்ப வேண்டும். மற்றொரு படிவத்தை தங்கள் பார்வைக்காக வைத்திருக்க வேண்டும்.

தேர்வுப் பகுதி எண் தெரியவில்லை என்றால் அப்பத்தியில் ஒன்றும் எழுதாமல் விட்டுவிடவும். ஆனால் சேர்க்கை எண்ணை அவசியம் குறிப்பிட வேண்டும்.

பதிவேட்டை நேரில் தர விரும்பினால் மாணவரோ அல்லது அவரால் அனுமதிக்கப் பட்ட நபரோ வேலை நாட்களில் (சனி ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் நீங்கலாக) பணி நேரத்தில் **இயக்குநர்,** *'B'* **பிரிவு, தொலைதூரக் கல்வி** மற்றும் இணையவழிக் கல்வி மையம், **அண்ணாமலைப் பல்கலைக்கழகம்** அவர்களிடம் நேரில் தரலாம். போதிய அஞ்சல் வில்லை ஒட்டி சுய முகவரி எழுதியுள்ள மேலுறை ஒன்றை இணைத்து அனுப்பவும்.

களப்பணி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் : 15.11.2026

அபராதத் தொகை ரூ.500/- உடன் களப்பணி பயிற்சி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் : 15.12.2026

இயக்குநர்